உ

சிவமயம்



இலங்கை, வட்டக்கச்சியை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

திரு. **கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா** அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

*In loving memory of the late*

# Mr Krishnapillai Vasantharaja

**05-03-2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

அன்பின் பிறப்பிடமாகவும்
பாசத்தின் வதிவிடமாகவும்
கருணையின் கடலாகவும்
பண்பின் படைப்பாகவும் — வாழ்ந்து
பலபேர் மத்தியில்
வசந்தமுள்ள வசந்தனாய் — மிளிர்ந்து
பாசத்தின் வலைக்குள் எம்மை சிக்கவைத்து
நட்பிற்கோர் நாயகனாய் வாழ்ந்து,
பல உறவுகளுக்குள் நுழைந்து
வானுறையும் தெய்வமாக சங்கமித்து
நிலையான இறையின்பம் பெற்ற
எங்கள் குலவிளக்கிற்கு — எங்கள்
இதயக்கமல மலர்களை
சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இவ்வண்ணம்
— குடும்பத்தினர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் நாமவளி

கணபதி ஓம் ஜய கணபதி ஓம்
கஜமுக வைங்கர கணபதி ஓம்
குணபதி யாம் சிவ கணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம்

(கணபதி ஓம்)

மூஷிக வாகன கணபதி ஓம்
மூலப் பிரவண கணபதி ஓம்
மாசறு தேசிக கணபதி ஓம்
வல்லபை மோகன கணபதி ஓம்

(கணபதி ஓம்)

விக்ன விநாயக கணபதி ஓம்
விகசித நகைமுக கணபதி ஓம்
உக்ர தபோபல கணபதி ஓம்
ஊர்த்துவ நர்த்தன கணபதி ஓம்

(கணபதி ஓம்)

பார்வதி பால கணபதி ஓம்
பரசிவ ஞான கணபதி ஓம்
பூர்ண வியாபக கணபதி ஓம்
புவன புரந்தர கணபதி ஓம்

(கணபதி ஓம்)

சுத்த சதாசிவ கணபதி ஓம்
சுந்தர குஞ்சர கணபதி ஓம்
நிந்திய தத்துவ கணபதி ஓம்
நின்மல சின்மல கணபதி ஓம்

(கணபதி ஓம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்"



தாயின் மடியில்
08-11-1975

ஆண்டவன்
அடியில்
03-02-2014

அமரர்

# திரு கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா

அவர்கள்

**திதி வெண்பா**

ஆண்டு விஜய வருடம் தைத்திங்கள்
ஆன பூர்வபக்க சதுர்த்தியினில் — பார்மேவும்
பண்பில் உயர் உத்தமனாம் கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா
ஆண்டவன் அடிதனில் உயர்பதம் தான் அடைந்தார் மாட்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமங் கைக்கூட்டும் — செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

## தேவாரம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணமறுமே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பிரானே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுத்தரசே
திருப் பெருந்துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆற்கெடுத்துரைப்பேன்
ஆண்டநீ அருளில்லையானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரிவாயே.

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்(து) அவன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்று (ம்) நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவர்!
முக்கண் நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்பல்லாண்டு

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி


## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புலியத லாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடி மீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த மாறன் பதிமிகு கூடலிலுறை வோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர் கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவில்லாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

"இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாழ் வாழ்க"

அமரர் திரு. கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா —வசந்தன்

என்று பலராலும் அன்புடன் அழைக்கப்பட்ட இவர்

கிளி வட்டக்கச்சியை பிறப்பிடமாகவும், கடைசி

பன்னிரண்டு ஆண்டுகளாக லண்டனில் வசித்தவரும் ஆவார்.

அன்னார் காலம் சென்ற திரு. கிருஷ்ணபிள்ளை

திருமதி. கி. நாகேஷ்வரி அவர்களின் கடைசி மகனாக

1975ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் திகதி வன்னி மண்ணில் பிறந்தார்.

இவரின் உடன்பிறப்புக்கள் சுமதி, விக்னராஜா, கோமதி, விஜயராஜா, ஆகிய நால்வர்.

அன்னார் தனது ஆரம்பக்கல்வியை அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, வட்டக்கச்சியிலும் உயர்படிப்பை வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திலும் கல்வி பயின்று, "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பதற்கிணங்க பல தொழில்களிலும் முயற்சியுடன் ஈடுபட்டு தன் திறமைகளால் அடுத்தவரை பிரமிக்க செய்வார்.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என் இடம்பெயர்ந்த மக்களுக்கு சொந்த முயற்சியில் வாழ்விட வசதிகளை அமைத்துக்கொடுத்து பலவித உதவி ஒத்தாசைகளை புரிந்து உதவும் பண்பில் மிளிர்ந்தார்.

"இல்லறமே நல்லறம்" என்பதற்கிணங்க திரு சபாரட்ணம், திருமதி. கமலம் தம்பதிகளின் மகள் ஜிவிர்லதாவை 2007ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார்.

இவர் இயற்கையை ரசிப்பவர், நண்பர்கள், உறவினர்களை உயிருக்கும் மேலாக நேசிப்பவர், அன்புக்கு என்றும் அடிபணியவர். நம்பினோர்க்கு என்று நல்குபவர். நகைச்சுவையோடு கலந்த பேச்சாளன். பழமையைப்போற்றும் பண்புடையவர், மிகுந்த நாட்டுப்பற்றாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட உன்னத உத்தம குணங்களை உடைய இவர் 03/02/2014 அன்று இறைபதம் அடைந்தார். இவரின் பூதஉடல் அக்கினியுடன் சங்கமித்தாலும் இவரின் நினைவுகள் எம்முடனே வாழும். அன்னாரின் ஆத்ம சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் மனக்குமுறல்

என் செல்லக்கண்ணனுக்கு!
மண்வீடு கட்டி விளையாடி, அம்மாக்கள் கதைக்கும்போது
மடிகளிலிருந்து நாமும் பல கதைபேசி, ஊஞ்சல் ஆடி உள்ளம்
மகிழ்ந்து இருந்ததை இன்றும நினைத்திருந்தோமே பாலகனாய்
இருக்கும்போதே என் விருப்பமே உன் விருப்பம் என்று
மகிழ்விப்பாயடா கண்ணா — இன்று என் உள்ளம்
வருந்த பிரிந்து சென்றாய் ஏனடா?

பல சமயங்களில் உன் அன்பு போதாது என போராடியிருப்பேன்
அது எல்லாம் வீண்போல மேலும் அதிக அன்பு நீ வைத்திருந்தற்கு
சாட்சிகள் கண்டு சிலிர்த்துப்போவேனடா!
நண்பர்களையும் உறவுகளையும் அதிகமாய் நேசித்தாயடா
ஆயினும் அவர்கள் ஆவலுடன் நாடும் போதும் ஒதுங்கியே வாழ்ந்தாயடா
உண்மையான அந்த அன்புக்கு விழிநீர் வழிய இரவுகளில் நீ கூறும்
ஆதங்கம் நிறைந்த கதைகளுக்கு நான் சாட்சியடா — அதை புரிய
வைக்கும் முன்பே நீ சாய்ந்து போனாயடா ஆனாலும்
உன் நண்பர்களும் உறவுகளும் உன் அன்பை புரிந்து கொண்டுள்ளனர்
என உணரும்போது ஆறுதலடைகின்றேன் கண்ணா.

உன் பூமுகமும் புன்னகையும் கண்ணுக்குள்ளே நிற்குதடா
நீதந்த சொந்தங்கள் உன்னோட நண்பர்கள் அன்போடு ஆறுதல்
தருகின்றார்கள் கண்ணா. உன்னோட மனைவி என்ற
கௌரவத்தை தந்துவிட்ட உனக்கு கோடான கோடி நன்றி கண்ணா.
உன்னோட ஆசைகளை நிறைவேற்ற துடிக்கின்றேன் — ஆனால்
நீயில்லாமல் என்னால பயணிக்க முடியுமா என்றுதான் தெரியவில்லை
அன்று நீ துடித்ததை இன்று நினைத்தாலும் ஆவி துடிக்குதடா
எவ்வளவு மன்றடிக்கேட்டும் தெய்வங்கள் கைவிட்டு விட்டதே கண்ணா
என் அன்பிற்கும் வலிமையில்லையோ — இருந்திருந்தால்
இணைந்திருக்கும் உன்னுடன் என்னை
என் செல்லக் கண்ணனின் அத்மா சாந்தியடைய
நீங்கள் அனுதினமும் நம்பிய என்பீல்ட் நாகபூசணி அம்மன்
என்றும் அருள் புரிவாள்.

சாந்தி சாந்தி சாந்தி

**திருமதி. வ. ஜிவிர்லதா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறப்புகளின் உள்ளத்து வேட்கை

கடைமகனாய் பிறந்து என்றும்
கலகலப்பாய் பேசுவாயே
சிறுவயது தொட்டு கண்டோமே உன்
சிரித்த முகமதை — வசந்தா

அப்பா, அம்மா, அக்கா, அண்ணா என்று
அழைக்கும்போது மீண்டும் — ஒருதரம்
அழைக்காயோ என்று ஏங்குதடா
சொல்லி விளங்கிடுமா? — அன்றி
சொல்லாமல் இருந்தால் தான் புரிந்திடுமா?

பாசத்துடன் பிணைந்திருந்தோம் — நாம்
பஞ்சபாண்டவர்போல் பிறந்தோம் என்றாயே
புலம்பெயர் தேசத்திலும் நீ வண்ண வண்ணமாய்
தோட்டம் செய்து வசந்தத்தை வரவழைத்துக்
காட்டிய வசந்தா நீ எங்கு சென்று மறைந்தாயடா?

உறவோடு ஒட்டி நின்ற உனை
உலகக் கண்ணை ஒரு கணம் மூடியே
காலனவன் உன்னைக் கவர்ந்து சென்றானோ
கதறுகிறோம் வசந்தா உனைக் காணாது....

அக்காவை "அக்களம்" என்றிடுவாய் ஆனந்தமாய்
அதை ஒரு தடவை கூறாயோ கண்ணா....
அன்பிற்கு அடிபணிவாய் — அதுவே
ஆண்டவனுக்கும் பிடித்ததுவோ யார் அறிவார்?.

மீண்டும் வாராயோ என
நீண்ட வழியில் விழிவைத்துக் காத்திருக்கும்
உன் உடன்பிறப்புகளுக்கு — என்ன பதில்
கூறிடுவாய் வசந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுக்கொரு அடைமொழிவைத்து
அழகழகாய் அழைத்திடுவாய் — எம்மை
ஆண்டாண்டு ஆனாலும் ஐயா
ஆறாதே உங்கள் துயரமது...

சித்தப்பா எங்கே குட்டிமாமா எங்கே
என்று செல்லக்கதைகூறும் குட்டிகளுக்கு
என்ன பதில் கூறிடுவோம்.
எம் குழந்தைகளின் மனமகிழ்வுக்காய்
எப்பாடுபட்டாயப்பா.....

அன்புதூவி அலங்கரிப்பாய் எம்மை,
என்றும் பாசத்தால் பிணைத்திருந்தாயே
எதையும் சொல்லியே செய்திடும் நீ
இதை மட்டும் சொல்லாமல் சென்றதேனோ?

அங்கிருவர் இங்கிருவராய் — நின்று நாம்
அழுது அழுது புலம்புகிறோம் ஐயா
தழுவி அணைக்கும் உனது பரிசம்
நழுவி வந்து அணைக்காதோ ஒரு நாள்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டு போன உனது உடலும் உயிரும்
தாண்டு தந்தளிக்கும் எம் உள்ளத்திற்கு
ஆறுதல் தான் அளித்திடுமோ — ஐயா

எமது அன்புத் தம்பியின் ஆத்ம சாந்திக்காக
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**சகோதரர்கள் சுமதி, விக்னராஜா, கோமதி, விஜயராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமி, மைத்துனர் துயரம்

அத்தை என்று அன்புடன் அழைத்து
ஆசையாய் கதைகள் சொல்லி
பேசிடும் எம் வசந்தன் எங்கே?
திருமணபந்தத்தில் இணைந்து — ஏழாண்டு
ஆகுமுன்பே எட்டாத தூரத்திற்கு நீ சென்றதேனடா?

வசந்தமான உன் வாழ்க்கை
வாசனை வீசும் என்று நாம் காத்திருக்க
வாசம் இழந்து வானுயர சென்றதேனோ?

மச்சான் மச்சாள் என்று உரிமையோடு
வாய் நிறைய அழைப்பாயடா — அந்த
பால்வடியும் உன் பிஞ்சுமுகம்,
என்றும் எம் நெஞ்சில் நின்று வாழுமடா.

அன்புக்கும் பண்பிற்கும் உறைவிடமாய்
வாழ்ந்து இறைவடி சேர்ந்த எமது
மருமகன், மைத்துனன் திரு கி. வசந்தராஜாவின்
ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அத்தை:
**திருமதி. கமலம் சபாரட்ணம்**

மைத்துனர்:
**லதா, பிறேமா, சுரேஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணிமார் அத்தான்மார் ஆதங்கம்

அண்ணி என்று அன்பாய் அழைக்கும் வசந்தன் எங்கே?
ஆற்றொணாத் துயரை தந்துவிட்டு ஆண்டவனடி சேர்ந்த தேனோ?

அன்பாய் அடிக்கடி கடியாய் கதைப்பாயடா
இனி யார்தான் எம்முடன் உனைப்போல கதைத்திடுவர்?
அண்ணி அடிக்கடி பிள்ளைகளை கூட்டி வாங்கோ— என
உரிமையாய்க்கேட்கும் — வசந்தம் ஒன்று
வாடிக் கருகி உதிர்ந்த தேனோ?

பெரியண்ணி என்று பெருமையாய் அழைக்கும் வசந்தன்
எங்கு சென்றானோ?
பேரழகுடன் மிளிர்ந்து பல்லாண்டு வாழ்வாயென
நாம் நினைத்திருக்க பேரிடியாக உன் மறைவுச்
செய்தி வந்ததேனோ?

பெரியத்தான், சின்னத்தான் என்றழைக்கையில்
பேரானந்தம் கொண்டோமே.
உடன்பிறப்புபோலவே உறவாடினாயடா
இன்று ஊனுடலை உதறித்தள்ளி வானுயர
சென்றதேனோ வசந்தா?

வசந்தனின் ஆத்ம சாந்திக்காக
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

அண்ணி: **திருமதி. நாகேஷ்வரி விக்னராஜா**
**திருமதி. ஆனந்தி விஜயராஜா**
அத்தான்: **திரு. கதிர்காமநாதன்**
**திரு. சிறீதரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்களின் உள்ளக் குமுறல்

சித்தப்பா நீங்கள் எங்கே சென்றீர்கள்
இனி எப்போ எங்களிடம் வருவீர்கள்?
Mc. Donald's கூட்டிச்செல்லும்
மகிழ்வான நாட்களை எப்படி நாம் மறப்போம்?

சித்தப்பா வந்தால் என்றும் ஆட்டம் பாட்டம்
கொண்டாட்டம் தானே.
Toys எல்லாம் வாங்கித்தந்து எங்களை
மகிழ்வித்தீர்களே — சித்தப்பா

அழுது அழுது கேட்கிறோம் — ஒரு தடவை
எம்மிடம் ஓடி வாங்கோ — வசந்தன் சித்தப்பா.

இலங்கையில் இருந்தாலும், தொலைபேசியில்
கதைத்து பகிடியால் குதுகலப்படுத்திய — இனிய
நாட்கள் எங்கே?
எம்மிடம் இன்றுவருவீர்கள், நாளை வருவீர்கள்
என்று விழி வைத்து காத்து இருந்தோம் சித்தப்பா.
உங்கள் நினைவாக எங்களுக்கு அனுப்பியதை
உள்ளம் மறந்திடுமா சித்தப்பா.
என்றோ ஒரு நாள் உங்கள் குரல் கேட்காதா? என
ஏங்கித் தவிக்கின்றோம் நாம் இங்கு.

எமதன்பு சித்தப்பாவின் ஆத்ம சாந்திக்காக
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

**அபிநயா, ஜெய்சால், சஜானி,**
**சிவஷேஷன், சாதுரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்களின் உள்ளக் குமுறல்

குட்டி மாமா என குழறி அழுகிறோம்
நாம் இருவர்,
மாமா என ஆசையாக அழைத்து
ஆண்டுகள் சிலதுதான்
ஆகுமுன்பு ஆண்டவனுக்கு
பொறுக்காமல் போன தேனோ?
அகல் குட்டி யென அழைத்திடும்
ஆசைமுகம் தான் எங்கே மாமா?
பிறந்தநாள் வந்ததுமே.....
பிரியமுடன் மாமாவின்
வாழ்த்து அதுவே முதல் வருமே..
பாடசாலை வந்துநீங்க
பாசமுடன் அழைத்து சென்றதை
என்னவென்று மறந்திடுவேன் என் அன்பு மாமா

குட்டி குட்டி பரிசில்களால் குவிந்து
குதூகலித்து மகிழ்வித்தீர்கள்.
குட்டி மாமா என்று
"கேசா நான் வாய் குவிக்க முன்பே,
மாயமாக மறைந்த செய்தியால்
வாயடைத்துப் போனேனே"
அகல், கேசா என அழைக்கும்
எம் அன்பு குட்டி மாமா எங்கே?

குட்டி மாமாவின்
ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

மருமக்கள்

**அகல்யா, கேசவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்த்தீபன் பிள்ளைகளின் ஆதங்கம்

அன்பான மாமாவே!
ஆசையுடன் தேடுகின்றோம்.
அழைப்பு மணி ஒலித்ததும்
ஆசையுடன் ஓடுகின்றான் தம்பி,
வாசலை நோக்கி வசந்தன் மாமா என்றபடி
வரவில்லை மாமா நீங்கள்.
வாடுகின்றதே.. அவன் முகம்.
வரண்டு போகிறது நா எமக்கு
எங்கே மாமாபோனீர்கள்?

இதங்கள் கனக்கிறதே...
வன்னியின் வலிகளை சொல் எனக்கேட்பாய்.
எம் வலிகள்வடுக்களாக கதை சொல்வாய்
விட்டுத்தள்ளுங்கோ
இது தரமான பிரித்தானியா என்றாய்.
தவறிய அழைப்பொன்று தந்தால்
தவறாமல் மாமா நான் வருவேன் என்றாய்
தவறிய அழைப்பு விடுத்து காத்திருக்கின்றோம்
வரவில்லை நீ.
தவறவிட்டுவிட்டோம் உனை நாங்கள்,
தவிக்கின்றோம் உன் உறவுகளுடன்

**அஜய், துஷா, யது, திகழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவொன்றின் உள்ளக்குமுறல்

வட்டக்கச்சி மண்ணில் — உன் பாதச்சுவடுகள்
ஒவ்வொரு வீட்டு முற்றத்திலும்
தடங்கலாக இன்னும் அழியாது இருக்கின்றன
வசந்தா நீ வரும்போது — எம் வீடுகளில்
வசந்தமும் கூடவே வந்துவிடும்

நாம் நினைத்தவற்றை நீ செய்தாய்
நாம் தேடியவற்றை நீயாக பெற்றுத்தந்தாய்
பூக்களை நேசித்தாய் — என்றும்
இயற்கையை அணைத்தாயே
பழகும் எல்லாரையும் — நீ
பாசமுடன் நேசித்தாய்.

வண்ணமும் வசந்தமும் என்றும்,
எண்ணமுடன் அவன் கூடவே இருந்துவிடும்.
பெயருக்கேற்ற பொலிவு பெற்றாய்
போற்றுதற்குரிய பண்பில் மிளிர்ந்தாய்.

நட்புக் கொள்வதிலும் — என்றும்
உறவு சொல்வதிலும் — நீ ஓர்
உத்தமன் என்றிடுவோம் — அம்மா அப்பாவை
நினைத்தாயோ அவர்களுடன் இணைந்தாயோ?

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

**உடன்பிறவா உறவுகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துளிகள் !!!

வாழ்வோமென பிறந்தவர் — இங்கே
வாழ்வதிலென்ன தடங்கல்?
பாசம் வைத்த உறவொன்று — இன்று
பறந்து போனதேனோ??

நொந்துபோன உறவுகளுக்கெல்லாம்
தோள் கொடுத்த குடும்பமுனது
kilipeople இன் தூணாய் நிற்கும் உனதண்ணன்
கலங்கி நிற்கிறான் ஏது சொல்வோம்?

கூடித்திரிந்த நண்பர்களும் — உன்னில்
பாசம் வைத்த உறவுகளும்
விட்டுப்பிரிய மனமின்றி — இன்று
விக்கி விக்கி அழுகின்றனரே

ஏது சொல்வாய் எம் வசந்தா!
ஒரு தரம் விழித்து எமைப்பாராயோ?
விழிமூடி சென்றவனே — உன்
ஆத்மா சாந்தி அடையட்டும்

— கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பு —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எப்போதுமே சிரித்த முகம்
மற்றவர்களை சிரிக்க வைக்கும் செயல்
கலகலத்த பேச்சு
குறும்புகளுடன் சுறுசுறுப்பான செயற்பாடு
இவை போதும், வசந்தனுடன் நட்பாவதற்கு

செல்லும் இடமெல்லாம்
தன்னைச் சுற்றி
நண்பர் கூட்டத்தை
உருவாக்கியவன்.

பால்குடிக்கும் மழலை முதல் பலமிழந்த தாத்தா வரை
அனைவரும் வசந்தனின் சிநேகிதர்கள்.
முதலாளி தொழிலாளி, தலைவன், தொண்டன்
பாமரன், படித்த பட்டம் பெற்றவன்,
உயர்ந்தவன் — தாழ்ந்தவன், நல்லவன் — கெட்டவன்
எல்லோருடனும் சமமாக நட்புக்கொண்டாட
அவனால் மட்டுமே முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப் பிரச்சினைகளை பூதாகாரமாக்கும் — நம்மவர் மத்தியில்
தலைபோகும் சந்தர்ப்பங்களையும் சிரிப்புடன்
சந்திக்கும் திறன் அவனுக்குமட்டுமே உரியது.
எதற்காகவும் அவன் அலட்டிக் கொள்ளவில்லை
யாருக்காகவும் தன்னை மாற்றிக் கொள்ளவில்லை
அவன் அவனாகவே இருந்தான்.

"டேய் கட்டையா..." என்றால் புன்னகை
"என்னடா கிருஷ்ணபிள்ளை" என்றால் புன்னகை
"கோபமூட்டும் வசனங்கள்" பேசின் புன்னகை
"கெட்ட வார்த்தைகளால் திட்டின்" அதற்கும் புன்னகை
"சண்டை வரும் சந்தர்ப்பத்திலும்" புன்னகை
எத்தனை துன்பம் வரும்போதும் எதிர்விளைவாக
புன்னகை மட்டுமே புரியும்படி
புரிய வைத்தவன் இவன்.

வட்டக்கச்சி வீதிகளெல்லாம்
உன் வரவுக்காய் காத்திருக்க...
நமை எல்லாம் வாட விட்டு
நீ சென்றதெங்கே?

உனது மறைவு — நிலையற்ற வாழ்வியலின்
மாயையை மீண்டும் நினைவூட்டியது நண்பனே!
மீண்டும் ஒரு பிறப்புண்டேல் — அப்போதும்
உனது நண்பனாக வேண்டுமென்பதே — எமது அவா
சென்றுவா நண்பனே!
உனது ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கும் நண்பர்கள்.

**பிரிவால் துயருறும் வட்டக்கச்சி நண்பர்கள்**

உற்றவனை இழந்து தவிக்கும் துணைவியாருக்கும் உடன்பிறப்புகளுக்கும் மற்றும் உறவுகளுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் துயரத்தில் நாமும் பங்குகொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துளிகள்...

அன்னை மடியில்
08-11-1975



ஆண்டவன் பிடியில்
03-02-14

## திரு கிருஷ்ணபிள்ளை வசந்தராசா (வசந்தன்)

வாழ்வோமென பிறந்தவர் - இங்கே
வாழ்வதிலென்ன தடங்கல் ?
பாசம்வைத்த உறவொன்று - இன்று
பறந்துபோனதேனோ ?

நொந்துபோன உறவுகளுக்கெல்லாம்
தோள்கொடுத்த குடும்பமுனது,
kilipeople இன் தூணாய் நிற்குமுனதண்ணன்,
கலங்கி நிற்கின்றான் ஏதுசெய்வோம் !

கூடித்திரிந்த நண்பர்களும் - உன்னில்
பாசம்வைத்த உறவுகளும்
விட்டுப்பிரிய மனமின்றி - இன்று
விக்கி விக்கி அழுகின்றனரே !

ஏது சொல்வாய் எம்வசந்தா
ஒரு தரம்விழித்து எமைப்பாரையா
விழி மூடி சென்றவனே - உன்
ஆத்மா சாந்தி அடையட்டும்....

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரினதும் எமது நண்பனும் Kilipeople அமைப்பின் நிறைவேற்றுக்குளு உறுப்பினருமான விஜயன் அவர்களினதும் ஆறாத்துயரில் பங்குகொண்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கண்ணீர் துளிகளுடன்

**கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பு – ஐ. இ**

Kilipeople.Org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RS Printers Ltd. T: 020 8782 3844, M: 07765 224 337

# கண்ணீர் அஞ்சலி



இறைவனின் படைப்பு
08-11-1975

இறைவனின் பறிப்பு
03-02-2014

## திரு கிருஷ்ணபிள்ளை வசந்தராசா (வசந்தன்)

இளமையோடு நீயிருந்து
சாதிப்பாயென நாமிருந்தோம் - எமை
சோகத்தில் ஆழ்த்திவிட்டு
சோதிப்பதேன் எம்வசந்தா ?

காலங்கள் கடந்தும் - நீ
வாழ்வாய்யென கனவு கண்டோம்
பாதியிலே போதுமென
கதை முடித்து சென்றாயோ ?

உதிரத்தையும் உறைய வைத்தாய்
பாசத்தையும் பறித்தெடுத்தாய் - இன்று
கண் கலங்கி நிற்கின்றோம்
கண்ணெதிரே வருவாயா ?


அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின்
ஆறாத்துயரில் பங்குகொண்டு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கண்ணீர் அஞ்சலிகளுடன்


**திரு. திருமதி அபராஜிதன் (அபா) குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RS Printers Ltd. T: 020 8762 3844, M: 07765 224 337



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

— திருவள்ளுவர்


03/02/2014 இல் எங்கள் குலவிளக்கு அணைந்ததினால் அதிர்ந்து நின்ற எமக்கு அருகிருந்து ஆறுதல் கூறியும், கண்ணீர் அஞ்சலிமூலம் ஆறுதல்கள் கூறிய அன்பு நண்பர்கள், உறவினர்களுக்கும் பல நாடுகளில் இருந்து தொலைபேசி மூலமும், Facebook மற்றும் emails மூலமும், ஆறுதல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்த அன்பு உறவுகளுக்கும், இறுதிக்கிரியை நிகழ்வுகளை சிறப்புற ஒழுங்கமைத்த அன்பு நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும், வீட்டுக்கிரியைகளில் கலந்து பல உதவிகள் புரிந்து ஆறுதல்களையும், ஆதரவையும் நல்கிய அனைவருக்கும் எங்கள் உளம் நிறைந்த நன்றிகள். மேலும் இறுதிக்கிரியை, வீட்டுக்கிரியைகளை ஒழுங்கமைத்து நடாத்திய குருக்கள் ஐயாக்கள் மற்றும் உதவியாளர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இங்ஙனம்,

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ,

அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையதை எதை நீ இழந்தாய்?

எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைதிருந்தாய், அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்து கொண்டாயோ,

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுக்தாயோ,அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவருடையதாகிறது

மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமாகும்"

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design & Printed by: RS Printers Ltd 07765 224 337 / 020 8782 3844